සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

තෙවන වාර පරීක්ෂණය 2020 | 11 ශ්‍රේණිය
மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம் 11
**Third Term Test 2020** | **Grade 11**

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය II | පැය දෙකයි
**தமிழ் மொழியும் இலக்கியமும் II** | **இரண்டு மணித்தியாலம்**
**Tamil Language & Literature II** | ***Two hours***

***கவனிக்க :***
- ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.***
- ***இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்***

1. சுருக்கமான விடை எழுதுக.
   1. பின்வரும் தொடரை பிரித்து எழுதுக.
      பனையின் நிரள்பழத் தொருவிதை
   2. ஔவையார் வாக்குண்டானை இயற்றினார். என்ற உடன்பாட்டு வினைமுற்றை எதிர்மறை வினைமுற்றாக மாற்றி எழுதுக.
   3. கண்ணே கலங்குவது ஏன் இங்க வர வேண்டிய நிறுத்தக் குறியீடுகள் எவை?.
   4. அம்மா காய்கறி வாங்கச் சந்தைக்குச் சென்றார்.
      தலைமைத் தொடர் சார்பு நிலைத்தொடர் என்பவற்றை எழுதுக.
   5. நெட்டெழுத்துக்கள் எவை?
   6. நடந்தான் என்பது எவ் இடைநிலையைப் பெற்று எதிர்காலத்தை உணர்த்தும்?.
   7. சதுரகராதியை எழுதியவர் யார்?
   8. அறிவித்தலை வழங்கும் அறிவிப்பாளரிடம் காணப்பட வேண்டிய திறமைகள் மூன்று தருக.
   9. 'website' என்ற கலைச்சொல் தமிழில் எவ்விதம் அழைக்கப்படுகின்றது.
   10. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
       "புலவரின் சந்ததியார் கல்லாதவராயின் ஓலைச்சுவடிகள் பரண்மீதேறும்".

(20 புள்ளிகள்)

**(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாள 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

(அ) "வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைத்த விந்தை மனிதன் தலைகுனிந்தான்". என பாரதி பெண் சுதந்திரம் வெற்றி கண்டமை பற்றி பாடுகின்றான். ஆனால் இன்னும் பெண்கள் சுதந்திரம் அற்றவர்களாக தமது மனத்தின் அழுத்தங்களை சமுதாயத்துக்கும் குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் காட்டாதவர்களாக வஞ்சிக்கப்படுகிறார்கள் என கூறப்படுகிறது. இவ்வகையில் பெண்களின் பிரச்சினையும் தீர்வும் பற்றி மங்கையர் மன்றத்தில் நீர் நிகழ்த்தும் ஒரு சொற்பொழிவு.

(ஆ) அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். அவ்வகையில் மானிடராகப் பிறந்தவா் எத்தனைபேர் இவ்விதம்தான் வாழ வேண்டும் தமது எதிர்கால குறிக்கோள்கள் எவ்வகையில் அமைய வேண்டும் என திட்டமிட்டே வாழ்கின்றனா். இன்னும் சிலா் ஏனோதானோ என அங்காடி வாழ்க்கை வாழ்கின்றனா் எது எப்படியெனினும் குறிக்கோள் இல்லாத வாழ்க்கை அா்த்தமற்றதே. இவ்வகையில் உமது வாழ்க்கையின் எதிர்காலத்தின் எதிர்பார்ப்புக்கள் பற்றிய உமது கருத்து வெளிப்பாடு.

(இ) விளம்பரங்கள் மக்களை மயக்கி அவர்களை ஏமாற்றுகின்றன என ஒருவர் கருத்துக்களை முன்வைக்கும் அதேவேளை விளம்பரம் மக்களின் தேவைகளை தெரிவுசெய்ய உடனடி நிவாரணம் என இன்னொரு சாராரும் தம் கருத்துக்களை வெளியிடுகின்றனா். எது எப்படி எனினும் விளம்பரங்கள் நன்மை பயக்கின்றன என்ற கருத்துக்களை விட விளம்பரங்களினால் ஏற்படுகின்ற பல்வேறு ஆபத்தான செயல்கள் துயரச்சம்பவங்கள் விளம்பரத்தின் பெருமையைச் சீரழிப்பதை அறியமுடிகிறது. அவ்வகையில் இன்றைய விளம்பரங்களின் போக்கு என்ற தலைப்பில் நன்மை தீமைகளை எடுத்துக் கூறி உமது அபிப்பிராயத்தை நியாயங்காட்டி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக

(ஈ) க.பொ.த. (சா த) பரீட்சையில் முதலாம் முறை பரீட்சைக்கு தோற்றி போதிய புள்ளிகளைப் பெறமுடியாது போனதால் விமலன் சற்றே தளர்ந்து போயிருந்தான். நண்பன் குமார் அவனை வழிகாட்டும் ஆலோசனைக் கூட்டமொன்றிற்கு அழைத்துச் சென்றான். அதற்குப் பின் சுதாரித்துக்கொண்ட விமலன் சுயமுயற்சியால் எப்படிஎல்லாம் முன்னேறலாம் என்பதைப் புரிந்து கொண்டு செயலில் இறங்கத்தொடங் கினான். இதனை அடிப்படையாகக்கொண்டு சிறுகதை ஒன்று வரைக.

(25 புள்ளிகள்)

**(03) கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியை சுருக்கி 40- 45 வரை சொற்களில் அமையுமாறு எழுதுக**

சரித்திர பாடத்தை சிறுவர் சிறுமியருக்கும் பெரியவர்களுக்குங்கூட விபரீதமாகக் கற்பிக்கிறார்கள். கேவலம் அரசர்களுடைய பெயர்களையும் சேனாதிபதிகளுடைய பெயர்களையும் சண்டை நடந்த திகதிகளையுமே அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். சண்டைகளைப் பற்றியாவது சில அரசர்களை பற்றியாவது சேனாதிபதிகளைப்பற்றியாவது கூறுவது மாத்திரம் சரித்திரமாகாது. சரித்திரம் என்றால் ஒரு நாட்டின் மக்களைப் பற்றியும் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் அவர்கள் என்ன செய்தார்கள் அவர்கள் சிந்தையில் வளர்ந்த எண்ணங்கள் எவை என்ற இவ்விசயங்களைபற்றியும் எடுத்துச் செல்ல வேண்டும். அவர்களுடைய சுகதுக்கங்கள் கஸ்ட நஸ்டங்கள் அவற்றை அவர்கள் எப்படி வென்றார்கள் என்பவற்றையுஞ் சரித்திரம் சொல்லவேண்டும். இந்நோக்கத்துடன் நாம் சரித்திரத்தைப் படித்தால் அதனின்றும் நாம் பல விசயங்களை அறிந்து கொள்ளலாம். ஒரு நாட்டினருக்கு ஏற்பட்ட கஸ்டத்தைப் போல நமக்குங் கஸ்டம் ஏற்பட்டால் அவர்கள் அக்கஸ்டத்தை எங்கனம் தீர்த்துக் கொண்டார்கள் என்பதை அறிந்து அவ்விதமே நாமும் நம் கஸ்டங்களைத் தீர்த்துக்கொள்ளச் சரித்திரம் நமக்கு வழிகாட்டும். முக்கியமாக நாம் பண்டைக்கால வரலாறுகளைப் படித்தால் மக்கள் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்தார்களா இல்லையா என்பவற்றை அறியலாம்.

**(04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

நினைவாற்றலை வளர்க்க உதவும் முக்கியமான கூறு நேரம் ஆகும். எதனையும் மேலோட்டமாக விரைவாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படாமல் ஒவ்வொன்றுக்கும் தேவையான உரிய நேரத்தை ஒதுக்கி அந்தப் பணியைச் செய்ய வேண்டும். இதன் மூலம் நினைவாற்றல் வளர்கிறது. ஒவ்வொரு பணியையும் அவசரப்படாமல் அதனை முடிக்க எவ்வளவு நேரம் தேவையோ அவ்வளவு நேரத்தை செலவிட்டு அந்தப் பணியை முடிக்க வேண்டும். இதன் மூலம் நினைவாற்றலை வளர்க்க முடியும். ஒரு நூலினை படிக்க ஒருவாரம் தேவை என்றால் ஒரு வார காலத்தை அதற்கு ஒதுக்க வேண்டும். அதனை அவசர அவசரமாக முடிக்க வேகம் காட்டக்கூடாது. அந்த வேகம் தான் நினைவாற்றலுக்கு எதிரி. ஒரு பணியை தொடங்கும் கணத்தில் அதன் மீது முழு ஈடுபாட்டுடன் தொடங்கவேண்டும். நிதானமாகச் செய்ய வேண்டும்.

1. இப்பகுதியின் முக்கிய கருத்து யாது?.
2. நினைவாற்றல் எவ்வாறு வளர்கிறது?.
3. ‘வேகம்தான் நினைவாற்றலுக்கு எதிரி’ விளக்குக.
4. இப்பகுதியில் இருந்து பெறத்தக்க பாடங்கள் 2 தருக.
5. ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கூறுக.

**(05) உமது கிராமத்தின் அறிவை மேம்படுத்த நூலகம் ஒன்றினை அமைத்து தருமாறும் அதன் அவசியம் பற்றியும் உமது கிராமத்துக்குரிய பிரதேச செயலாளருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.**

அல்லது

**உமது பாடசாலையின் தரம் 10-11 மாணவர்களின் தமிழ் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ்த்தின விழாவில் பட்டிமன்றம் ஒன்றை நடாத்த இந்தியாவிலிருந்து பிரபல்யமானவர்கள் வருகை தர உள்ளனர். இவர்களின் நிகழ்ச்சியைக் கேட்க வருமாறு அனைவரையும் அழைக்கும் வகையில் 60 சொற்கள் அளவு கொண்ட துண்டுப்பிரசுரம் தயாரிக்க.**